# சமூக அறிவியல்

## ஒன்பதாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

# வரலாறு

## 1. பிரெஞ்சுப் புரட்சி (1789)

"பிரான்சுக்கு ஜலதோஷம் பிடித்தால் ஐரோப்பாக்கண்டமே தும்மும்"
என்பது ஐரோப்பிய வழக்கு

பிரெஞ்சுப் புரட்சி பிரான்சு வரலாற்றில் ஒரு கிளர்ச்சிக் காலமாகும். இக்காலகட்டத்தில் பிரான்சின் எதேச்சதிகார மன்னராட்சியும் சமுதாய முப்பிரிவுகளும் தூக்கி எறியப்பட்டன. மூன்றாவது பிரிவின் மக்கள் அல்லது கீழ்நிலையிலுள்ள பாட்டாளி வர்க்கம் தங்களைச் சமூகத்தின் மற்ற பிரிவினர்கள் நடத்திய முறையினால் மனம்வெதும்பி தீவிர மாற்றங்களை உரிய முறையில் பெற விரும்பினர்.



பதினாறாம் லூயி

### வல்லாட்சி முறை

பிரான்சின் எதேச்சதிகார மன்னராட்சி முறை மன்னரின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையிலானது. இந்தக்



மேரி அண்டோனட் அரசி

கோட்பாட்டிற்கு திருச்சபை ஆதரவளித்தது. மன்னராட்சியில் தங்களுக்குள்ள குறைகளைக் கூறவும், நிவாரணங்களைக் கோரவும் மக்களுக்கு இதனால் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற மூன்றவைகளைக் கொண்ட அமைப்பு ஓரளவுக்கு பிரதிநிதித்துவம் கொண்ட மரபு வழியான அமைப்பாக இருந்து வந்தது. திருச்சபையின் பிரதிநிதிகளுக்கு என்று ஓர் அவையும், பிரபுக்களுக்கு என மற்றொரு அவையும், பொதுமக்களுக்கு என மூன்றாவது அவையும் இதில் உள்ளடங்கி இருந்தன. இது ஒரு ஆலோசனை அவையாகவே இருந்தது. ஆனால் இது 1614 ஆம் ஆண்டிலிருந்து

சமூக அறிவியல்

கூட்டப்படவில்லை. பார்லிமென்ட் என்ற மற்றொரு அமைப்பு மன்னரின் ஆணைகளைப் பதிவு செய்யும் அமைப்பாக இருந்தது. இந்தப் பார்லிமென்டைக் கூட அரசவை புறக்கணித்து வந்தது. மக்கள் பிரச்சனையைப் பற்றி அரசன் அறிந்து கொள்வதற்கான எந்த ஓர் அமைப்பும் பிரான்சில் இல்லாமல் போனது.

## பொருளாதாரக் காரணங்கள்

நிலமானிய முறை சீரழிந்து கொண்டிருந்தது. அரசனுடன் நெருக்கமாகவும் ஆடம்பரமாகவும் வாழும் பல நிலப்பிரபுக்கள், தமது நிலங்களை அதிகாரிகளது கண்காணிப்பில் விட்டுவிட்டு தலைநகரங்களில் வாழ்ந்து வந்தனர். இந்த அதிகாரிகள் நிலங்களைத் தவறாக நிர்வகித்து, விவசாயிகளையும் சுரண்டினர். பெரும்பாலான வரிகளிலிருந்தும், கட்டாயமான உடல் உழைப்பிலிருந்தும் பிரபுக்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அதே சமயம், அப்பிரபுக்கள் விவசாயிகளிடமிருந்து அளவிற்கு அதிகமான வசூல்களை மேற்கொள்ளவும், அவர்களது உற்பத்திப் பொருள்களைத் தங்களது கட்டுப்பாட்டில் வைக்கவும் செய்தனர். அவர்களுக்கு இணங்க மறுத்த விவசாயிகளைக் கடுமையாகத் தண்டிக்கவும் அவர்களுக்கு உரிமை இருந்தது. இதுபோன்று பிரான்சின் நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு திருச்சபை குருமார்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களுக்கும் பெரும்பாலான வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அத்துடன் மக்களிடமிருந்து ‘டைத்ஸ்’ மற்றும் பிற வரிகளை வசூலிக்கவும் செய்தனர்.

இவ்வாறு அப்பாவிகளான விவசாயிகள், அரசு, பிரபுக்கள், திருச்சபை ஆகிய அனைவராலும் சுரண்டப்பட்டனர். பெரும்பான்மையான வரிகள் விவசாயிகள் மீதே திணிக்கப்பட்டது. அரசிற்காகவும், பிரபுக்களுக்காவும், திருச்சபைக்காகவும் ஊதியமின்றி உடல் உழைப்பு தருமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். சிறிதளவு மறுப்புத் தெரிவித்தாலும் கொடிய அடக்கு முறைகள் ஏவப்பட்டன. பிரெஞ்சு அரசிற்கு உதவும், அளவிற்குப் பிரெஞ்சுக் குடியேற்றங்கள் செழிப்பாக இருக்கவில்லை. பாரம்பரியத் தொழில்கள் தேக்கமடைந்திருந்தன. எங்கும் ஏழ்மையும், பட்டினிச் சாவுகளும் காணப்பட்டன.

கத்தோலிக்க திருச்சபை பிரெஞ்சு சமூகத்தின் மீது முழுமையான ஆதிக்கம் செலுத்தியது. அவர்களது பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்வதுடன் திருமணங்களை முறைப்படுத்துவதும் கல்விக் கூடங்களை நடத்துவதும், நல்ஒழுக்கங்களைவரையறுப்பதுவும் திருச்சபையின் கட்டுப்பாட்டில் இருந்தன. திருச்சபை, பரந்த நிலங்களுக்கு உடைமையாளனாகவும், வரிகளிலிருந்தும் ராணுவச் சேவை, கட்டாய உடலுழைப்பு போன்றவற்றிலிருந்து விலக்குப் பெற்றதாகவும் இருந்தது. சமூகத்தின் ஏழைப் பிரிவினரின் நலன்களுக்கு எதிராக, அரசனுடனும், பிரபுக்களுடனும் இணைந்து செயல்பட்டது. ஊழலும், ஒழுக்க சீரழிவுகளும் மக்களிடையே திருச்சபையை செல்வாக்கிழக்கச் செய்தன.


## போர்களின் பளு

பதினான்காம் லூயி மன்னன் காலத்திலிருந்து பிரான்சு பிற ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்ந்து போரிட்டு வந்தது. ஏழாண்டுப் போர், ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர்களால் பிரான்சின் கருவூலம் காலியானது. அதே சமயம், இப்போர்களினால் பிரான்சுக்கு எத்தகைய ஆதாயமும் ஏற்படவில்லை. இத்தகைய செலவுமிக்க போர்களின் விளைவாகப் பிரான்சில் ஒரு பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டது.

## சிந்தனையாளர்களின் பங்கு


அக்காலத்திய புகழ்பெற்ற தத்துவ அறிஞர்களின் சிந்தனைகளாலும், எழுத்துகளாலும் பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் ஈர்க்கப்பட்டனர். அவர்களில் வால்டேர் பல நாடுகளிடையே புகழ் பெற்ற எழுத்தாளர். மூடநம்பிக்கைகளுக்கும், திருச்சபைக்கும்

எதிராகக் குரல் எழுப்பினார். அவரது சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட பிரஷ்ய மன்னர் மகா பிரடரிக் அவரைக் கௌரவித்தார்.



ரூசோ

ரூசோ என்ற சிந்தனையாளர் மன்னராட்சியின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரது சமுதாய ஒப்பந்தம் என்ற நூல் பிரெஞ்சுப் புரட்சியின் மறைநூலாக அமைந்தது. அவரது கருத்துப்படி மக்களது விருப்பம் தான் ஆட்சியின் ஆணிவேர் ஆகிறது. அதனால் சுதந்திரமாகப் பிறக்கும் மனிதனுக்குச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கான உரிமை உண்டு. மாண்டெஸ்கியூவின் கருத்துப்படி அனைத்து அதிகாரங்களும் அரசனிடம்



மாண்டெஸ்கியூ

குவிந்திருக்கும் வல்லாட்சிதான் மக்களின் துன்பங்களுக்குக் காரணமாக அமைகிறது.

இங்கிலாந்து மாதிரியிலான அதிகாரப்பிரிவினைச் சட்டம்,நிர்வாகம்,நீதி என்ற அரசியலமைப்பு ரீதியிலான மாற்றம்தான் மக்கள் நல அரசைத்தரும் என அவரது "சட்டங்களின் உணர்வு" (Sprit of Laws) (சட்டத்தின் சாரம்) என்ற நூல் கூறுகிறது. இவர்களைத் தவிர பொருளாதாரச் சீர்திருத்தங்களை உடற்கூறு வல்லுநர்கள் ஆதரித்தனர். பிரஞ்சு புரட்சியின் தலைவர்கள் இத்தகைய புரட்சிக் கருத்துக்களால் உணர்வும் ஊக்கமும் பெற்றனர்.

### புரட்சிக்கு உடனடிக் காரணங்கள்

1789ஆம் ஆண்டிற்கு முன் தலைவிரித்தாடிய வறட்சியும், பஞ்சமும், நிலைமையை மேலும் மோசமாக்கி உணவுக் கிளர்ச்சிகளுக்கு (Bread Riots) இட்டுச் சென்றன. அரசவை, குறிப்பாக அரசி மேரி அண்டோனட் மக்களது இன்னல்களில் உணர்வற்றவராகவும், தனது முன்யோசனையற்ற வார்த்தைகளால் மக்களது ஆத்திரத்தைத் தூண்டுபவராகவும் இருந்தார். அதே நேரத்தில், அமெரிக்கச் சுதந்தரப் போரில் பங்கு பெற்றுத் திரும்பிய தொண்டர்கள் புரட்சிகரமான உணர்வுகளுடன் இருந்தனர். அவர்கள் அமெரிக்க விடுதலைப் போரின் வெற்றிகளாலும், அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட குடியரசு முறைகளாலும் உணர்வூட்டப் பெற்றிருந்தனர். அவர்கள் கிளர்ச்சி செய்து வந்த மக்களுடன் சேர்ந்து கொண்டு புரட்சியாளர்களது கரங்களை வலுப்படுத்தினர்.

### பிரெஞ்சுப் புரட்சி – 1789

### புரட்சியின் துவக்கம்

1789 இல் பிரெஞ்சு மக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர்

1. மத குருக்கள்
2. பிரபுக்கள்
3. பொதுமக்கள்

சமூக அறிவியல்

பதினாறாம் லூயியும் அவரது மனைவியான மேரி அண்டோனட்டும் திறமையற்ற ஆட்சியாளர்கள் அவர்களின் ஆடம்பர, பொறுப்பற்ற ஆட்சி முறையினால் அரசின் வருவாய் பெருமளவு செலவழிக்கப்பட்டு பிரான்ஸ் அரசு கடனில் மூழ்கியது.

**1789** ஆம் ஆண்டு பதினாறாம் லூயி மன்னர் பிரான்சில் **1614** இல் இருந்து கூட்டப்படாமல் இருந்த ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற அவையைக் கடன்பற்றி விவாதிக்கக் கூட்டினார்.

பதினாறாம்லூயி மன்னரால் 'ஸ்டேட்ஸ் ஜெனரல்' அவை கூட்டப்பட்டதும், அதன் மூன்றாவது அவையான மக்கள் அவை, மூன்று பிரிவுகளின் பிரதிநிதிகள் ஒரே இடத்தில் இணைந்து கூட்டப்பட வேண்டும் என்று அரசரை அவசரப்படுத்தியது. மூன்றாவது பிரிவு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், வாக்களிக்கும் முறை இவர்களுக்கு சாதகமாக இல்லை. ஒவ்வொரு பிரிவுக்கு ஒரு ஓட்டு முறையே பின்பற்றப்பட்டது.

அரசர் இவர்கள் கோரிக்கைகளை ஏற்க மறுத்ததுடன், மீண்டும் மக்கள் அந்த அரங்கில் கூடாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுத்தார்.

**வாக்களிக்கும் முறை**


| முதல் பிரிவு | இரண்டாம் பிரிவு | மூன்றாம் பிரிவு |
|---|---|---|
| ஒரு வாக்கு | ஒரு வாக்கு | ஒரு வாக்கு |

எப்போதும் முதல் இரண்டு பிரிவும் இணைந்துவிடுவதால், மூன்றாவது பிரிவைவிடப் பெரும்பான்மை பெறுகிறது.

**1 + 1 = 2 : 1** (மூன்றாவது பிரிவு)

## டென்னிஸ் மைதான உறுதிமொழி

மூன்றாவது பிரிவு உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளை விட மறுத்து வெர்செய்ல்ஸ் அரண்மனைக்குப் பக்கத்தில் உள்ள டென்னிஸ் வளாகத்தில் கூடினர்.



டென்னிஸ் மைதான உறுதிமொழி

அங்கே அவர்கள் தங்களையே ஒரு தேசிய மன்றமாக அறிவித்து, ஓர் அரசியலமைப்பை உருவாக்கும் வரை கலையப் போவதில்லை. என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இது 'டென்னிஸ் கோர்ட்' உறுதிமொழி என்று அறியப்படுகிறது.


தனது புதியவரி கோரிக்கைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவு கிடைக்கப் போவதில்லை, என்பது அரசனுக்குத் தெளிவாயிற்று. எப்படியேனும் மக்கள் மன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று மன்னர் திட்டமிட்டார். மன்னரின் இரகசியத் திட்டத்தை அறிந்து கோபம் கொண்ட மக்கள் மன்னருக்கும் அவரது ஆட்சிக்கும் எதிராகப் புரட்சியைத் துவங்கினர்.

### பாஸ்டைல் சிறை தகர்ப்பு

அரசவையின் போக்கினால் ஆத்திரமுற்ற பாரீஸ் நகர மக்கள் கிளர்ந்தெழுந்து 1789, ஜூலை 14ஆம் நாளன்று கிளர்ச்சிக்காரர்கள் சிறை வைக்கப்பட்டிருந்த பாஸ்டைல் சிறைச் சாலையைத் தாக்கினர்.

இந்தப் பாஸ்டைல் சிறைச்சாலை "அரசருக்குரிய எதேச்சதிகார சின்னம்" என்று மக்களால் வெறுக்கப்பட்ட ஒன்றாகும். கிளர்ச்சிக்காரர்கள் சுவிஸ் சிறைக் காவலர்களைத் தாக்கி, சிறைச் சாலைக் கதவுகளை உடைத்து கைதிகளை விடுவித்தனர். பாஸ்டைல் வீழ்ச்சியை விடுதலை நாளாக நாடெங்கும் கொண்டாடினர்.

பாஸ்டைல் வீழ்ச்சி மன்னராட்சியை மேலும் பலவீனப்படுத்தியது பாரிஸ் நகர மக்கள், நகர நிர்வாகத்திற்காக "பாரீஸ் கம்யூன்" என்ற அமைப்பை உருவாக்கினர். வறுமையினாலும் பசிக்கொடுமையினாலும் இன்னலுற்ற பாரீஸ் நகரப் பெண்கள் (ரொட்டி) உணவு கோரி வெர்செய்ல்ஸ் மாளிகைக்குச் சென்றனர். ஆனால் எவ்வித பதிலும் கிடைக்காததால், ஊர்வலமாகச் சென்று, அரண்மனைக்குள் நுழைந்து சூறையாடினர். அரசன், அரசி, அவர்கள் குழந்தைகளை ஆடம்பரமான வெர்செய்ல் மாளிகையிலிருந்து பாரீஸ் நகருக்கு ஊர்வலமாகக் கொண்டு சென்று விட்டனர். அதன் பின் அரச குடும்பத்தினர் பாரீஸ் நகரிலேயே வாழ நேரிட்டது.



பாஸ்டைல் சிறை தகர்ப்பு

### தேசிய மன்றம்

1789 ஆகஸ்ட் 12 ஆம் நாளன்று தேசிய மன்றமானது "மனிதன் மற்றும் குடிமகனது உரிமைகள் பிரகடனம்" வெளியிட்ட "மாக்னா கார்ட்டா" (பேரறிக்கை) கி.பி.1215 மற்றும் 1689 இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் வெளியிட்ட "உரிமைகள் மசோதாவை" போல மிகச் சிறப்பான மனித உரிமை அறிக்கையாக மதிப்பிடப்படுகின்றது.


### மதகுருமார்களின் சிவில் அரசியல் அமைப்பு

தேசிய மன்றம் தன்னையே ஒரு அரசியலமைப்பு அவையாக (Constituent Assembly) அறிவித்துக் கொண்டு புதிய அரசியலமைப்பை 1791 இல் உருவாக்க முற்பட்டது. இது அரசனது அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியது. சட்டம் இயற்றும் உரிமை இனி சட்ட மன்றத்திற்கே உரியது என்று அறிவிக்கப்பட்டது. அனைவருக்கும் மதச் சகிப்புத்தன்மை உறுதி செய்யப்பட்டன. திருச்சபையின் சொத்துக்கள் தேசியவுடைமையாக்கப்பட்டன. இனிமேல் திருச்சபையின் அதிகாரிகள் அரசின் மூலம் நியமிக்கப்பட்டனர். திருச்சபையின்உயர் பதவியிலுள்ளவர்களது ஊதியங்கள் குறைக்கப்பட்டன. கீழ்ப் பதவியிலிருந்தவர்களுக்கு ஓரளவு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. இவ்வாறு திருச்சபையைச் சட்ட மன்ற விதிகள் மூலமாகக் கட்டுப்படுத்தும் சட்ட அமைப்பை "மதகுருமார்களின் சிவில் சட்ட அமைப்பு" (Civil Constitution of Clergy) எனப்பட்டது. இச்சட்டம் திருச்சபை மீதான கட்டுப்பாட்டு உரிமையைப் போப்பாண்டவரிடமிருந்து அரசாங்கத்திற்கு மாற்றியது. போப்பாண்டவர் இச்சட்டத்தைக் கண்டித்தார். பிரெஞ்சு அவை, மதகுருமார்கள் அனைவரும் அரசிற்கு விசுவாசமாக இருக்க உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தியது. இதன் விளைவாகப் பிரெஞ்சு திருச்சபையில் பிளவு ஏற்பட்டது.


விசுவாச உறுதி மொழி எடுப்பவர்கள், எடுக்க மறுப்பவர்கள் என இரு பிரிவுகள் தோன்றின. இதனால் திருச்சபைக்கும் அரசிற்கும் இடையே மோதல்கள் உருவாயின. இந்தச் சட்டத்தின் மீது மன்னனுக்கு அதிருப்தி இருந்தாலும் இதற்கு ஒப்புதல் அளித்துக் கையெழுத்திட்டார்

### அரசன் வெர்செய்ல்ஸ்க்குத் தப்புதல்

1791 ஜூன் மாதம், பதினாறாம் லூயி தன் குடும்பத்துடன் நாட்டைவிட்டு தப்பிச்செல்ல முயன்றார். ஆனால் வார்னஸ் என்னும் எல்லையோர நகரில் அவர் பிடிக்கப்பட்டு சிறைவைக்கப்பட்டார். பின் விசாரணை நடத்தப்பட்டு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. விசாரணைக்குப்பின் 1793



கில்லட்டின் மூலம் அரசி மேரி அண்டோனட் கொல்லப்படுதல்



கில்லட்டின் மூலம் பதினாறாம் லூயி கொல்லப்படுதல்

ஜனவரி 21இல் பொது மக்கள் முன்னிலையில் கில்லட்டின் கருவியின் மூலம் லூயியின் தலை வெட்டப்பட்டது. மேரி அண்டோனட்டும் பிறகு இவ்வாறு கில்லட்டின் மூலம் கொல்லப்பட்டார். அரசனுக்கு ஆதரவானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நூற்றுக்கணக்கானவர்களும் கொல்லப்பட்டனர். பிரான்சில் அராஜகம் தலைவிரித்தாடியது.

## அச்சத்தின் ஆட்சி

1792ஆம் ஆண்டு செப்டம்பரிலிருந்து தேசிய அவை அரசியலமைப்பை உருவாக்க முனைந்தது. மன்னராட்சி ஒழிக்கப்பட்டு 1792 செப்டம்பர் 21 இல் குடியரசு அறிவிக்கப்பட்டது. பயங்கரவாதிகளின் தலைவர் டான்டன், ரோபஸ்பியர் தலைமையில் பொது பாதுகாப்புக்குழு நியமிக்கப்பட்டது. இதன் தலைவர்களுக்கு அளவில்லா அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 1792 செப்டம்பர் முதல் 1794 ஜூலை வரை இந்த அச்சத்தின் ஆட்சி தொடர்ந்தது. கொல்லப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கான பிரபுக்களும் பல அப்பாவிகளும் இருந்தனர். இந்நிகழ்ச்சியே புரட்சியின் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. 1794இல் ரோபஸ்பியர் கில்லட்டினில் கொல்லப்பட்டதுடன் அச்சத்தின் ஆட்சி முடிவிற்கு வந்தது.



கில்லட்டின்



ரோபஸ்பியர்

## டைரக்டர் அரசு

1795 இல் தேசிய அவையில் இருந்த மிதவாதிகள் ஒரு புதிய அரசியல் அமைப்பை வெளியிட்டனர். அதன்படி ஐந்து பேர் கொண்ட இயக்குநர் அவை ஐந்தாண்டுகளுக்கு 1795இல் இருந்து 1799 வரை ஆலோசனை வழங்க இரு அவைகளைக் கொண்ட இம்மன்றம் அமைக்கப்பட்டது. இம்மன்றம் நல்ல நிர்வாகத்தைக் கொடுக்கத் தவறிவிட்டது. 1799இல் புதிய அரசியல் அமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசு ஆதரவாளர்கள் பாரிசில் கிளர்ச்சி செய்தவர்களை அடக்க ஒரு படையை அனுப்பியது. இவ்வாறு பிரெஞ்சுப் புரட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

## நெப்போலியன் போனபார்ட்

கார்சிகா இளைஞன் நெப்போலியன் போனபார்ட் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பொறுப்பேற்றார். பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை என்று அழைக்கப்பட்ட இவர், 1799 முதல் 1815 வரை பிரான்சைத் திறமையாக ஆட்சி செய்தார். நிர்வாக முறையை அறிந்த இவர், குழப்பமான நிலையில் இருந்த பிரான்சை வாட்டர் லூ போரில் இவர் தோல்வி அடையும் வரையில் நிலையான ஆட்சியைக்கொடுத்தார்.

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181



நெப்போலியன் போனபார்ட்

## பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள்

1789 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி தீவிரமான மாற்றங்களைக் கொண்டு வந்தது. அது மனித குல வரலாற்றில் ஒரு புதிய யுகத்தினைத் தோற்றுவித்தது. அப்புரட்சியின் குறிப்பிடத்தக்க விளைவுகள் பின்வருமாறு:

1) இப்புரட்சியின் விளைவாக மன்னரின் வரம்பற்ற வல்லாட்சி ஒழிக்கப்பட்டது. அரசியலமைப்பிற்கு உட்பட்ட ஆட்சி உருவாக்கப்பட்டது.

2) நிலமானிய முறை அடியோடு ஒழிக்கப்பட்டது. பண்ணை அடிமைகள் விடுதலையடைந்தனர்.

3) பிரபுக்கள் மற்றும் திருச்சபையின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு அவை ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

4) 1794 முதல் திருச்சபையின் கட்டுப்பாட்டிலிருந்து அரசு விடுவிக்கபட்டது. சமயச் சார்பற்ற அரசும், சட்ட முறையும் கொண்ட கொள்கை உருவாக்கப்பட்டது.

5) பிரான்சிலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.

6) மதச்சார்பற்ற முறையில் கல்வி மாற்றியமைக்கப்பட்டது.

7) பிரெஞ்சு மக்களிடையே தேசிய உணர்வையும், ஒற்றுமையையும் தோற்றுவித்தது. இதனால் பல நாடுகளிலும் விடுதலை உணர்வுகள் ஊக்கம் பெற்றன. (இலத்தீன் அமெரிக்க நாடுகள், இந்தியா).

8) 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரெஞ்சுப் புரட்சி இத்தாலி மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளில் தேசப்பற்றை உருவாக்கி அந்நாடுகளின் ஐக்கியத்திற்கு தூண்டுகோலாய் இருந்தது.

9) பிரெஞ்சுப்புரட்சிக் கருத்துகளான "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" ஆகியவை ஐரோப்பாவில் மட்டுமின்றி, உலகின் பிற நாடுகளிலும் பரவின.

10) ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் புதிய ஜனநாயக முறை, சமுதாய அமைப்பு தோன்றுவதற்கு முன்னோடியாகப் பிரெஞ்சுப் புரட்சி இருந்தது.

11) புரட்சியின் விளைவாக மிகச்சிறந்த நிர்வாகியான நெப்போலியன் போனபார்ட் முன்னணிக்கு வந்தார்.

12) பிரெஞ்சுப் புரட்சி சொர்க்கத்திலிருந்து வந்த மன்னா என்ற உணவாகக் கருதப்பட்டது.

**தெரிந்துகொள்**

1889 இல் பாரிசில் நடந்த கண்காட்சிக்காகப் பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டைச் சிறப்பிப்பதற்கு ஈஃபிள் கோபுரம் கட்டப்பட்டது.



ஈஃபிள் கோபுரம்

**தெரிந்துகொள்**

பிரான்ஸ் நாட்டு மக்கள் பிரெஞ்சுப் புரட்சி வரை குடிமக்களாய் இருந்ததைவிடக் கிறித்துவர்களாக இருந்தார்கள். பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துகளால் அமெரிக்க நாட்டின் ஆபிரகாம் லிங்கன் இந்திய தேசத்தந்தை மகாத்மா இருவரும் ஈர்க்கப்பட்டனர்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற ஆண்டு ___________.
   அ) 1749 ஆ) 1759 இ) 1779 ஈ) 1789
2. ஸ்டேட்ஸ் ஜெனரல்___________நாட்டின் பாராளுமன்றம்
   அ) இங்கிலாந்து ஆ) பிரான்சு இ) ரஷ்யா ஈ) இத்தாலி
3. 'சமூக ஒப்பந்தம்' என்ற நூலை எழுதியவர்___________.
   அ) வால்டேர் ஆ) ரூசோ இ) மாண்டெஸ்கியூ ஈ) டான்டன்
4. பிரெஞ்சுப் புரட்சி _________ மன்னரது காலத்தில் நடைபெற்றது.
   அ) பதிமூன்றாம் லூயி ஆ) பதினான்காம் லூயி
   இ) பதினைந்தாம்லூயி ஈ) பதினாராம் லூயி
5. பிரான்சின் சின்னமாக இருந்தது___________.
   அ) வெர்செய்ல்ஸ் சிறை ஆ) பாஸ்டைல் சிறை
   இ) பெர்லின் சிறை ஈ) வார்னஸ் சிறை
6. பயங்கர ஆட்சி முடிவுற்ற ஆண்டு___________.
   அ) 1790 ஆ) 1791 இ) 1792 ஈ) 1794
7. "பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை" என்று அழைக்கப்பட்டவர் ___________.
   அ) பதினாறாம் லூயி ஆ) ரோபஸ்பியிர்
   இ) வால்டேர் ஈ) நெப்போலியன் போனபார்ட்

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | சட்டத்தின் சாரம் | செப்டம்பர் 1792–ஜூலை 1794 |
| 2. | இரண்டாம் பிரிவு | வால்டேர் |
| 3. | மூன்றாவது பிரிவு | வாட்டர் லூ |
| 4. | பயங்கர ஆட்சி | ரூசோ |
| 5. | டைரக்டர் அரசு | மாண்டெஸ்கியூ |
| 6. | நெப்போலியன் போனபார்ட் | பிரபுக்கள் |
| | | பொதுமக்கள் |
| | | 1795–1799 |

## இ. குறுகிய அளவில் விடையளி.

1. பிரெஞ்சுச் சட்டமன்றத்தின் மூன்று பிரிவுகள் பற்றி சிறு குறிப்பு வரைக.
2. டென்னிஸ் மைதான உறுதி மொழி என்பது யாது ?
3. மனித உரிமைகள் அறிவிப்பு எப்போது வரையப்பட்டது. குறிப்பு வரைக.
4. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவு ஏதாவது இரண்டை எழுது ?
5. நெப்போலியன் போனபார்ட் என்பவர் யார் ?

## ஈ. கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. எதேச்சதிகார ஆட்சி

   அ) பிரெஞ்சு அரசு எந்தக் கொள்கையின் மீது சார்ந்துள்ளது ?

   ஆ) இக் கொள்கையை ஆதரித்தவர்கள் யார் ?

   இ) 'ஸ்டேட்ஸ் ஜெனரல்' என்பது யாது ?

   ஈ) பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் கடைசியாக எப்போது இந்த அவை கூட்டப்பட்டது.

2. பாஸ்டைல் சிறைத்தகர்ப்பு

   அ) பாஸ்டைல் சிறைத் தகர்ப்பு எப்போது நிகழ்ந்தது ?

   ஆ) எதேச்சதிகார ஆட்சியின் சின்னம் எது ?

   இ) எந்த நாள் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டது ?

   ஈ) பிரெஞ்சுப் புரட்சி போக்கின் முக்கிய நிகழ்ச்சி யாது ?

3. பயங்கர ஆட்சி

   அ) தேசியப் பேரவை எப்போது கூடியது ?

   ஆ) தேசியப் பேரவை அறிவித்தது என்ன ?

   இ) பொது பாதுகாப்புக்குழுவுக்கு யார் தலைமைதாங்கியது ?

   ஈ) பயங்கர ஆட்சியின் காலம் என்பது யாது ?

## உ. பத்தியளவில் விடையளி.

1. பிரெஞ்சுப் புரட்சியின் பொருளாதாரக் காரணங்கள் யாவை ?
2. பிரெஞ்சுப் புரட்சியில் சிந்தனையாளர்களின் பங்கை விவரி.
3. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் யாவை ?

## உருவாக்க மதிப்பீடு

1. 'A Tale of two cities' (இரு நகரங்களின் கதை) என்ற திரைப்படத்தைப் பார்த்து அதுபற்றி ஆய்வுரை எழுதுக.
2. கில்லட்டின் மாதிரி ஒன்றைத் தயார் செய்க.
3. கீழ்க் குறிப்பிடும் படங்களைச் சேகரித்து உன் துணுக்குப் புத்தகத்தில் ஒட்டி பிரெஞ்சுப் புரட்சியில் அவைகளின் பங்கு குறித்து குறிப்பு எழுதுக.
   அ. மேரி அண்டோனெட் ஆ. வெர்செய்ல்ஸ் அரண்மனை
   இ. பாஸ்டைல் சிறைத் தகர்ப்பு ஈ. ஈஃபில் கோபுரம்

## உங்களுக்குத் தெரியுமா ?

### நோபல் பரிசு




ஆல்பிரட் நோபல் (1833–1896)

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த சக்திமிக்க வெடிமருந்து (டைனமைட்) கண்டுபிடிப்பாளர் ஆல்பிரட் நோபல் 1895 ஆம் ஆண்டு நோபல் பரிசை நிறுவினார். மனித இனத்திற்குச் சிறந்த முறையில் தொண்டாற்றும் இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி மற்றும் உடற்செயலியல் அல்லது மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்த சாதனையாளர்களுக்கு 1901 ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது. 1969 ஆம் ஆண்டு முதல் பொருளாதார அறிவியலுக்கும் நோபல் பரிசு வழங்கப்படுகின்றது.



இலக்கியம் : பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளரும் பெண் எழுத்தாளருமான ஸ்வெட்லானா அலெக்ஸி விச் (67) அவர்கள் மானுடத்தின் குரல்களைப் பதிவு செய்யும் விதமாக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு மனித உணர்வுகளின் வரலாறு மற்றும் ஆத்மாவின் வரலாற்றை உருவாக்கியதற்காக 2015 ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

# 2. தமிழ் நாட்டின் பண்பாட்டு மரபுகள்

இந்தியாவில் வேத காலத்திற்கு முன்பு, சிந்து சமவெளியை மையமாகக் கொண்ட திராவிட நாகரிகம் தழைத்திருந்தது. பின், ஆரியர்களின் வருகைக்குப்பின் தென்னிந்தியா, குறிப்பாகத் தமிழகம் திராவிட நாகரிகத்தின் மையமாக மாறியது. தமிழ் மொழியும், பண்பாடும், திராவிட குடும்பத்தின் மீது பழமையானவையும், இன்றளவும் வாழ்ந்து கொண்டிருப்பவையாகவும், தமிழ்மொழியும், தமிழ்ப் பண்பாடும் இருக்கின்றன.

தொன்மையான பாலி மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள் தமிழ் மற்றும் தென்னிந்தியப் பகுதிகளை "திராமிளா" (Dramila) மற்றும் "திராவிட" என்ற சொற்களால் குறிப்பிட்டன. வட நாட்டை ஆரியவர்த்தம் எனவும், தென்னாட்டை திராமிளா மற்றும் திராவிட என்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

தமிழ் மொழியும், இலக்கியங்களும் தொல் பழமையானவை. மாமூலனார் போன்ற சங்ககாலப் புலவர்கள் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நந்தர்கள் மற்றும் மௌரியர்களின் சமகாலத்தவர்கள். ஆகவே தமிழ் மொழி 2500 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து கொண்டிருக்கும் வரலாற்றை உடையதாகும். தமிழ் மொழி பன்முக இலக்கிய வளத்தாலும், பழமையாலும் தரத்தில் உயர்ந்து செம்மொழித் தகுதியைப் பெற்றுள்ளது. சமஸ்கிருதம் போலல்லாமல், ஆனால் சீன மொழியைப் போன்று இந்திய துணை கண்டத்தின் மிகப் பழமையான, மக்களிடையே செல்வாக்குப் பெற்று புகழ்பெற்று வாழ்ந்து கொண்டு இருக்கும் மொழி தமிழ் மொழியாகும். தென்னிந்தியாவில் திராவிட மொழிகளில் மூத்த மொழி தமிழ் மொழியாகும்.

கி.மு.500 முதல் கி.பி.1300 வரை தமிழ் நாட்டின் அரசியல் வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (1) சங்க காலம் (2) களப்பிரர் காலம் (3) தமிழ்ப் பேரரசுகளின் காலம்.

சங்க காலத்தில் தமிழ்நாடு, அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. மலைசார்ந்தநாடுகளை ஆட்சி செய்த குறுநில மன்னர்கள் 'வேளிர்' எனப்பட்டனர்.எடுத்துக்காட்டாகப்பொதிகை மலையை ஆய், குதிரைமலையை அதியமான், பரம்பு மலையைப் பாரி என்ற வேளிர்கள் ஆட்சி செய்தனர். வளமான ஆற்றுச் சமவெளிகளைச் சேர, சோழ, பாண்டியர் போன்ற முடியுடை வேந்தர்கள் ஆட்சி செய்தனர். அரசர்களும், குறுநில மன்னர்களும் அறிஞர்களையும் கவிஞர்களையும் ஆதரித்தனர், மன்னர்கள் சிலரும் கவிதை இயற்றும் திறமை பெற்றிருந்தனர். (எடுத்துக்காட்டு: ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்) மன்னர்கள் தங்களுக்குள்ளும் சிங்களர்கள், கடம்பர்கள், யவனர்கள், ஆரியர்கள் போன்ற அயலவர்களுடனும் போரிட்டு வந்தனர். சங்க காலத்தின் புகழ் பெற்ற மன்னர்களாகச் சேரன் செங்குட்டுவன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், கரிகால் சோழன் ஆகியோர் விளங்கினர்.

தமிழ் நாட்டை இரண்டாவது கட்டமாக, கி.பி.3 ஆவது நூற்றாண்டு முதல் கி.பி. 6 ஆவது நூற்றாண்டு வரை களப்பிரர்கள் ஆண்டனர். இக்காலத்திலும் தமிழ் இலக்கியம் தொடர்ந்து வளர்ந்தது. வஜ்ஜிர நந்தி என்ற சமணத்துறவி மதுரையில் திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார். அச்சுத விக்ரந்தா உறையூரை ஆண்ட புகழ் பெற்ற களப்பிர மன்னராவார்.

களப்பிரர் ஆட்சி வட தமிழகத்தில் பல்லவர்களாலும், தென் தமிழகத்தில் பாண்டியர்களாலும் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டது. சிம்ம விஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் போன்ற பல்லவ மன்னர்கள், சாளுக்கியர்கள்,

இராட்டிரகூடர்கள், கங்கர்கள் ஆகியோரை வெற்றிகொண்டு ஒரு பெரும் பேரரசை உருவாக்கினர். அவர்கள் சைவ, வைணவ சமயங்களை ஆதரித்தனர். ஆகவே சைவ வைணவ ஆலயங்களை அமைத்தனர். தென்பகுதியில் பாண்டியர்கள் அரசியல் ஒற்றுமையை உருவாக்கியதுடன், பக்தி இயக்கத்திற்கும் ஆதரவு அளித்தனர். ஒன்பதாம் நூற்றாண்டு இறுதியில் விஜயாலய சோழன், ஆதித்திய சோழன் ஆகியவர்களால், தஞ்சையில் மீண்டும் சோழர்களின் ஆட்சி ஏற்பட்டது. முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் போன்ற வலிமை வாய்ந்த மன்னர்களால் சோழ அரசு சோழப் பேரரசாக விரிவடைந்தது. அவர்கள் வெங்கி சாளுக்கியர்களையும், சேரர், பாண்டியர் மற்றும் சிங்களர்களையும் வென்றனர். இராஜேந்திரன் கடாரம் மற்றும் வங்கத்தின் மீது படையெடுத்தான். சோழர்கள் சைவ சமயத்தைப்பின்பற்றினர். அழகான, சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பிரம்மாண்டமான சைவ கோவில்களைக் கட்டினர். அவற்றில் பிரகதீஸ்வரர் ஆலயம் (தஞ்சைப் பெரியகோவில்),கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

சோழர்கள் ஸ்ரீவிஜயப்பேரரசு, சீனா போன்ற தொலை தூர நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். 13 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மதுரையில் மீண்டும் பாண்டியர் ஆட்சி மீட்டுருவாக்கம் பெற்றதாலும் துவார சமுத்திரத்தில் ஹோய்சாளர்கள் எழுச்சியுற்றதாலும் சோழர்கள் வீழ்ச்சியடைந்தனர்.

## ஆட்சி முறை

சங்க கால அரசு 'மன்னராட்சி' முறையில் அமைந்திருந்தது. மன்னர்கள் கட்டுப்பாடற்ற முழு அதிகாரம் பெற்று விளங்கினர். மன்னரின் அதிகாரத்தில் தலையிட எவருக்கும் உரிமையில்லை. இருப்பினும் மன்னர் 'அமைச்சரவை'யின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தார். 'அவை' 'நாளவை' 'மன்றம்' எனவும் அரசவை அழைக்கப்பட்டது. அரசவையில் அமைச்சர்கள், படைத்தலைவர்கள், உயர் அதிகாரிகள், பட்டத்து அரசி, பட்டத்து இளவரசர், மற்ற இளவரசர்கள், இடம் பெற்றனர். மன்னனுக்கு நிலையான படை அமைப்பு இருக்கவில்லை. போர்க் காலங்களில் கட்டாய இராணுவ சேவை வலியுறுத்தப்பட்டது. (அ) காலாட்படை (ஆ) குதிரைப்படை (இ) யானைப்படை (ஈ) தேர்ப்படை எனப் படைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. சங்க காலத்தில் கடற்படையெடுப்புகளும் நிகழ்ந்துள்ளன. கடம்பர் என்னும் கடற்கொள்ளையாளர்களுக்கு எதிராக சேரன் செங்குட்டுவனது படையெடுப்பு, கரிகாலனது, சிங்களப் படையெடுப்பு என்பனவற்றைக் கூறலாம். மண்டலம், கோட்டம், ஊர் என்ற உள்ளாட்சி நிர்வாகப் பிரிவுகள் இருந்தன. முதியோர் அவையால் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்டன. முறையான நிதி நிர்வாகம் நடைமுறையில் இருந்தது. போரின் போது கொள்ளையடிக்கபட்டவை, வணிக வரி, சுங்க வரி, உப்பு வரி, அன்பளிப்புகள், கப்பங்கள் போன்றவை அரசு வருவாய்களாகும். அரசர்கள், குறிப்பாகப் பாண்டியர்கள், சோழர்கள் வேளாண்மையை ஊக்குவித்தனர்.காடுகளை அழித்து விளைநிலங்களைப் பெருக்கினர். தடுப்பணைகள் மூலம் ஆற்று நீரைத் தேக்கினர் புதிதாகக் கைப்பற்றிய இடங்களில் வேளாண் குடியேற்றங்களை ஊக்குவித்தனர்.

பேரரசு காலத்தில் மன்னரது அதிகாரங்களும், பொறுப்புகளும் அதிகரித்தன. அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமானது. கடற்படையுடன் கூடிய வலிமையான, நிலையான படை உருவாக்கப்பட்டது. பல முறைகளை இணைத்த மாநில நிருவாக அமைப்பு ஏற்பட்டது. பேரரசு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மண்டலங்கள் நாடுகளாகவும், நாடுகள் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டன.

ஒவ்வொரு கோட்டமும் பல பேரூர்களையும் (பெரிய நகரங்கள்), ஊர்களையும் (கிராமங்கள்), நகரங்களையும் (வியாபார நகரம்), பட்டினங்களையும் (கடற்கரை நகரங்கள்) கொண்டிருந்தது.

கிராமங்களில் ஊரார், நாடுகளில், நாட்டார் எனப்படும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட உள்ளாட்சி அமைப்புகளால் நிருவகிக்கப்பட்டன. பிராமணர்கள் குடியிருப்புகளான கிராமங்கள் (பிரம்மதேயம்) உள்ளூர் பிராமணர்களது அவைகளால் நிர்வாகம் செய்யப்பட்டன. அவை மகாசபைகள் எனப்பட்டன. மகாசபைகள் எவ்விதத்திலும் வெளியார் தலையீடின்றி சுதந்திரமாக செயல்பட்டதுடன் பொதுவான வரிகளிலிருந்து விலக்குகளும் பெற்றவையாக இருந்தன. சோழர்களின் காலம் மகாசபையின் பொற்காலம் என்பர். கோயில்கள் கட்டவும், பொதுப் பணிகள் செய்யவும் மக்களின் உடலுழைப்பு கட்டாயமாக்கப்பட்டது. உணவு உற்பத்தியைப் பெருக்க அணைகளும், கால்வாய்களும் அமைக்கப்பட்டன. ஏரிகளும் குளங்களும் கிணறுகளும் தோண்டப்பட்டன.

## சமுதாயம்

தொல்காப்பியத்திலுள்ள 'பொருளதிகாரத்தில்' சங்க காலத் தமிழரின் சமூக நிலை விவரிக்கப்பட்டுள்ளது. தமிழர்களிடம் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சாதிமுறை காணப்படவில்லை. நிலத்தின் அடிப்படையில் திணைப்பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. புவியியல் அமைப்பில் தமிழ்நாட்டிலுள்ள நிலப்பகுதிகள்(1)மலையும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி எனவும் (2) காடும் காடு சார்ந்த பகுதியை முல்லை எனவும் (3) வயலும் வயல் சார்ந்த பகுதியை மருதம் எனவும் (4) கடலும் கடல் சார்ந்த பகுதியை நெய்தல் எனவும் (5) மழையின்றி வளம் குன்றி வறண்டுபோன பகுதியை பாலை எனவும் ஐந்திணைகள் ஆகப் பிரிக்கப்பட்டிருந்தன. திணைகளின் அடிப்படையில் மக்களும் பின்வருமாறு பிரித்தறியப்பட்டனர்.

மக்கள் பொதுவாக கீழ் கண்டவாறு பிரிக்கப்பட்டனர்.

1. குறிஞ்சி நில மக்கள் – குறவர் (அ) வேடர்
2. முல்லை நில மக்கள் –இடையர் (அ) ஆயர்
3. மருத நில மக்கள் –உழவர்
4. நெய்தல் நில மக்கள் –பரதவர் (அ) மீனவர்
5. பாலைப் பகுதி மக்கள்–கள்வர்

மருத நகரங்களில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப்பிரிவுகள் காணப்பட்டன. பாணர் (பாடகர்), விரலியர் (நடன மாடுபவர்), குயவர் (மட்பாண்டம் செய்வோர்), உமணர் (உப்பு வணிகர்), வண்ணார் (துணி துவைப்பவர்), நெசவாளர் (துணி நெசவு செய்பவர்), கைவினைஞர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள் என்ற பல தொழில்களைச் செய்பவர்கள் வாழ்ந்ததாக சங்க கால இலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது. பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாயிருந்தனர்.பெண்கள் பலர் கவிஞர்களாக இருந்தது சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

காதல் திருமணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 'கற்பை' பெண்கள் தங்கள் உயிருக்கு மேலாக மதித்தனர். சில அரச குடும்பங்களில் மட்டும் சதி என்னும் உடன்கட்டை ஏறிய ஒரு சில நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பல்லவர்கள் காலத்தில் சாதி முறை கடுமையாக்கப்பட்டது.பிராமணர்களுக்குச் சமுதாயத்தில் உயர்ந்த இடம் அளிக்கப்பட்டது. பிராமணர்கள் மதத்தலைவர்களாகவும், அரசியல் மற்றும் சமூக ஆலோசகர்களாகவும், நீதிபதிகளாகவும் இருந்தனர். அவர்களுக்கு நிலங்கள் தானமாகவும், வரிவிலக்குடனும் அளிக்கப்பட்டன. மற்ற அனைத்துப் பிரிவினரும்(அந்தணர் நீங்கலாக) சூத்திரர்கள் என்ற பிரிவில் கொண்டு வரப்பட்டனர். தீண்டாமை கடுமையாக்கப்பட்டது. நிலமற்ற உழவர்கள் கல்வி கற்பதிலும், கோவில் மற்றும் பொது நிகழ்வுகளிலும் ஒதுக்கப்பட்டனர்.

சோழர்களின் ஆட்சியின் இறுதியில் சாதி முறையில் வலங்கை, இடங்கைப் பிரிவுகள் தோன்றியதால், சமூகத்தில் சண்டை சச்சரவுகள், அமைதியின்மை போன்றவை அதிகரித்தன.

நாலடியார், திருக்குறள் போன்ற சங்க இலக்கியங்கள் சாதியைக் குறிப்பிட்ட போதிலும், அதனை ஏற்கவில்லை. சங்கத் தமிழர்கள் சமயச் சடங்குகளின் மீது வைத்த நம்பிக்கையை விட ஒழுக்க நெறியை மதித்தனர்.

பக்தி இயக்கத்தின் போது சாதிப் பாகுபாடு இல்லாமல் அனைத்து தரப்பு மக்களையும் பக்தர்களாக ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஏற்றுக்கொண்டனர்.

## சங்க இலக்கியங்கள்

சங்க கால இலக்கியங்கள் வெவ்வேறு சமூகப் பிரிவுகளைச் சார்ந்த ஆண், பெண் புலவர்களால் எழுதப்பட்டன. சங்க இலக்கியங்கள் பொதுவாக மதசார்பற்றவை தங்களுக்கு எந்த ஒரு தெய்வீகத் தன்மையையும் கூறிக்கொள்ளாதவை. சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம், (இலக்கணநூல்) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு மற்றும் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அடங்கும். எட்டுத் தொகை, பத்து பாட்டு போன்றவற்றில் காதலும், வீரமும் போற்றப்படுகின்றன. பெரும்பாலான பதினெண்கீழ்கணக்கு நூல்கள் ஒழுக்கத்தை (நீதியை) வலியுறுத்துகிறது. ஐம்பெரும் காப்பியங்களும் (சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி) ஐங்குறுங் காப்பியங்களும், (நீலகேசி, சூளாமணி, உதயனகுமார காவியம், யசோதரா காவியம் நாககுமார காவியம்) சில இலக்கண நூல்களும் (பிங்கல நிகண்டு, யாப் பெருங்கலம்) களப்பிரர் காலத்தில் இயற்றப்பட்டன. இப்பேரரசு காலத்தில் அதிகளவில் பக்தி இலக்கியங்கள் எழுதப்பட்டன. தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்யபிரபந்தம். பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் சைவ, வைஷ்ணவ சமயத்தைப் போற்றின. நந்திகலம்பகம், மூவருலா, கலிங்கத்துப் பரணி, நன்னூல், வீரசோழியம் போன்ற மதச் சார்பற்ற இலக்கியங்கள் குறிப்பிடத்தக்கவை. தமிழ் கல்விக்குச் சோழர்கள் புலவர் முற்றூட்டு (நன்கொடை) மூலமாக ஆதரவளித்தனர்.



இராமானுஜர்

பல்லவர்கள் காலத்தில் ஆட்சி மொழியாக சமஸ்கிருதத்தை ஏற்றுக் கொண்டும், அரசின் ஆதரவு சமஸ்கிருதக் கல்விக்கு இருந்த போதும், மத்தவிலாச பிரகசனம், கிரதார்ஜீனீயம், அவந்தி சுந்தரி, கதா, காவியதர்சம் போன்ற ஒரு சில சமஸ்கிருத இலக்கியங்களே புகழ்பெற்று விளங்கின. கோவில்களிலும் சமயச் சடங்குகளிலும் சமஸ்கிருத மொழியே பின்பற்றப்பட்டது. சமஸ்கிருதத்தைக் கற்பிக்கும் பிராமணர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட (பட்ட விருத்தி, வேத விருத்தி) நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன.

## சமயம்

சங்க காலத்தில் வழிபாட்டு முறைகள் திணை அடிப்படையில் அமைந்திருந்தன. மதக்கண்ணோட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் எந்தவிதமான வெறித்தன்மையும் இல்லாத தாராளமான கண்ணோட்டம் கொண்டிருந்தனர். அவர்களது சமூக – அரசியல் நடவடிக்கைகளில், சமயம் ஒரு முக்கியமான

கூறாக இருக்கவில்லை. வீரக்கற்கள் வழிபாடு இருந்தது சேயோன், மாயோன், வேந்தன், வருணன். வலியோன், கொற்றவை போன்றவை திணை வழியிலான செல்வாக்குப் பெற்ற தெய்வங்களாக விளங்கின. கணேசர் வழிபாடு (விநாயகர்/பிள்ளையார்) காணப்படவில்லை. குரவைக்கூத்து, வெறியாட்டு போன்ற ஆடலும், பாடலும் வழிபாட்டில் இடம் பிடித்தன. இத்தெய்வங்களுக்கு மலர்களும், தானியங்களும் விலங்குகளும் படைக்கப்பட்டன. பிராமணர்களின் வேள்விகள், சில அரசர்களைக் கவர்ந்தபோதிலும், மக்களிடையே அவை புகழ் பெறவில்லை. சங்ககாலத்தில் சமணம், பௌத்தம், அஜீவிகைசம் போன்ற சமயத்தத்துவங்கள் தமிழ்ச் சமுதாயத்தில் இடம்பிடித்தன. அவை களப்பிரர் காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றன.

பல்லவர் காலத்தில் பக்தி இயக்கம் சிறப்பான இடத்தைப் பிடித்தது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் புத்த சமண சமயங்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தனர். சிவன், திருமால் போன்ற தெய்வங்களும் அவர்களது தேவியர்களும் முதன்மையான தெய்வங்களாயினர். சோழர் ஆட்சியின் இறுதியில் 'முருகவழிபாடு' (முருக பக்தி) புகழ் பெற்றது. கோயில்களில், உள்ளூர் பூசகர்கள் படிப்படியாக அகற்றப்பட்டு பிராமணர்கள் பூசகர்களாக மாறினர். சமஸ்கிருதம் சமய மொழியாயிற்று. சமண, பௌத்த கோவில்கள் பல இடிக்கப்பட்டன. அல்லது சைவ, வைணவ கோயில்களாக மாற்றப்பட்டன. சோழர்கள் காலத்தில் ஏற்பட்ட சைவ, வைணவ சமய மோதல்களுக்குச் சான்றாக சிதம்பரம் கோவிலில் இருந்த தில்லை கோவிந்தராசர் சிலை அகற்றப்பட்டதும், வைணவரான ராமானுஜர் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்ததையும் கூறலாம். தமிழ்ச் சித்தர்கள் சாதி, கோயில், மூடச்சடங்குகள், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை அறிவு பூர்வமாக எதிர்த்தனர்.

## கலை மற்றும் கட்டடக்கலை

சங்ககாலத் தமிழர்கள், தமக்கெனத் தனியொரு இசை, நடனம், நாடகம் (பண், ஆடல், கூத்து) போன்ற கலைகளை உருவாக்கியிருந்தனர். பாணரும், விரலியரும் மரபு சார்ந்த இசை மற்றும் நடன கலைஞர்கள் ஆவர்.

யாழ் என்ற நரம்புக் கருவியும், குழல் என்ற காற்றுக் கருவியும், முழவு என்ற தோல் கருவியையும் இசை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தினர். திருவிழாக்களும் கடவுள் வழிபாடும் இசை, நடனத்துடன் ஒன்று கலந்திருந்தது. பல்லவர்களது குடுமியான் மலைக் கல்வெட்டில் உருத்திராச்சாரியார் என்ற புகழ் பெற்ற இசைக் கலைஞரைப் பற்றிய செய்தியுள்ளது. தேவாரம், திவ்வியபிரபந்தம் ஆகியவை இசையுடன் பாடக்கூடியவை. புராணங்கள் கூத்துகளாகவும், கதைகளாகவும் நடிக்கப்பட்டன. தேவதாசிகள் (ஆலயச் சேவகிகள்) மிகச் சிறந்த நடனமாதர்களாவார்கள்.

சங்க கால கட்டடங்கள் அழியதக்க செங்கல், மரம் முதலியவற்றால் அமைக்கப்பட்டவை எனலாம். பல்லவர்கள் காலத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய குடவரைக் கோயில்களின் மூலம், ஒரு புதிய வகைச் சிற்பம் மற்றும் கட்டடக் கலை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறையில் மலைப் பாறைகளைக் குடைந்து புடைப்புச் சிற்பங்களுடன் கூடிய மண்டபங்கள் அமைக்கப்பட்டன. (எடுத்துக்காட்டு மாமல்லபுரத்திலுள்ள மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம்.) பின் ரதம் போன்று செதுக்கப்பட்ட ஒற்றைக்கற்கோவில்களை அமைத்தனர். (மாமல்லபுரம் பஞ்சபாண்டவ ரதங்கள்) அதன் பின் செதுக்கப்பட்ட கற்பாறைகளை இணைத்து கற்கோயில்களைக் கட்டினர். எடுத்துக்காட்டாக மாமல்லபுரக் கடற்கரை கோயில், காஞ்சி சைலாச நாதர் ஆலயம் வைகுந்தப் பெருமாள் ஆலயம். இக் கோயில்களிலுள்ள விமானங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. பல்லவர் காலக் கட்டட

கலை பிற்காலச் சோழர் காலத்தில் மேலும் விரிவு படுத்தப்பட்டது. சோழர்கள் காலத்தில் பிரமாண்டமான வானளாவிய கோவில்கள் கட்டப்பட்டன. பரந்துவிரிந்த வளாகங்கள், பாதுகாப்பான உட்புறச் சுற்றுச் சுவர், சிற்ப வேலைப்பாடு மிக்க அழகிய தூண்களுடன் கூடிய மண்டபங்கள் (மகா மண்டபம், அர்த்த மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம்) கருவறை, பெரிய விமானங்கள், தளங்கள் கட்டப்பட்டன. கடவுளர்களுக்காகக் கருவறைகள் போன்ற கூறுகள் குறிப்பிடத்தக்கவை. தஞ்சை பிரகதீஸ்வரம், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் போன்ற இடங்களில் காணப்படுகின்ற கோயில்கள் சோழர் காலக்கட்டிடகலைக்குச் சிறந்த சான்றுகள். இக்கோயில்களில் எல்லாம் மிகச்சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.



ஐந்து ரதங்கள்

ஓவியக் கலைக்குச் சான்றாகச் சித்தன்னவாசல் குகைகள், காஞ்சி கைலாசநாதர் கோயில், பிரகதீஸ்வரர் கோயில் போன்றவைகளில் மிகச் சிறந்த ஓவியங்கள் உள்ளன. கல்லிலே சிலை வடித்தது போன்று, வெண்கலம் போன்ற உலோகத்தாலும் சிலைகள் வார்க்கப்பட்டன. சோழர் காலத்திய வெண்கலத்தால் ஆன நடராசர் சிலை, சைவ, வைஷ்ணவ உற்சவ மூர்த்திச் சிலைகள், 63 நாயன்மார்களின் சிலைகள் உலகப் புகழ் பெற்றவையாம்.



பிரகதீஸ்வரர் கோயில் – தஞ்சாவூர்

தமிழர்கள் தங்களுக்கெனக் கணிதம், காலவியல், வானவியல், மருத்துவம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கினர். சங்க இலக்கியங்களில் எண், கணக்கு நாழிகை, யாமம், காதம், கோல் போன்ற அளவைகளும், இளவேனில், தொடங்கி, பின்பனி வரை அறுவகைப் பருவ காலக் கணக்குகளையும் அறிந்திருந்தனர். ஏலாதி, திரிகடுகம், சிறு பஞ்சமூலம் போன்ற நூல்களின் பெயர்கள் மூலம் அவர்களின் மருத்துவ அறிவை அறியலாம்.



வைகுண்டப் பெருமாள் கோயில் – காஞ்சிபுரம்

கணியன் என்பவர் வானவியல் மற்றும் ஜோதிடவியலில் வல்லவராவார். தமிழ்ச் சித்தர்கள் சித்த வைத்திய முறையில் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் தங்கள் ஆய்வுகளையும், சிகிச்சைகளையும், மருந்து தயாரித்தலைப் பற்றியும் மருந்து தயாரிக்கப் பயன்படுத்திய மூலிகைகள் பற்றியும், தெளிவாக எழுதி வைத்துள்ளனர்.

இறுதியாகத் தமிழர்கள், மனிதச் செயல்பாடுகளின் பல துறைகளிலும் சிறந்து விளங்கினர். அவர்களின் தத்துவம்

பேரளாவிய உலகப் பார்வை கொண்டது. அவர்களது இறையியல் மூடநம்பிக்கைகளுக்கு அதிக இடமளிக்கவில்லை. சமண, பௌத்த சமயங்கள் போன்று தமிழர்களும் "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். மனிதன் தன் விதியைத் தானே தீர்மானிக்கிறான் என்பதில் தெளிவாக இருந்தான். இந்திய வரலாற்றில் தமிழர்களின் மரபு ஒரு புகழ் வாய்ந்த பகுதியாகும்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்வு செய்க

1. தமிழ் மொழி குறைந்தபட்சம்__________ஆண்டுகள் தொடர்ச்சியான வரலாற்றை உடையது.

   அ) 3500 ஆ) 2500 இ) 1500 ஈ) 4000

2. களப்பிரர்கள் __________ஆல் வடதமிழ்நாட்டிலும் காஞ்சியில் முறியடிக்கப்பட்டனர்.

   அ) பல்லவர்கள் ஆ) சேரர்கள் இ) சோழர்கள் ஈ) பாண்டியர்கள்

3. புகழ் பெற்ற இசைக்கலைஞர் உருத்ராசாரியார் பற்றி பல்லவர்களது__________ கல்வெட்டு குறிப்பிடுகிறது.

   அ) குடுமியான் மலை ஆ) உத்திர மேரூர் இ) மாமண்டூர் ஈ) மகேந்திரவாடி

4. பல்லவர்கள்__________மொழிக்கு முக்கியத்துவம் அளித்தனர்.

   அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) சமஸ்கிருதம் ஈ) மலையாளம்

5. சங்க காலத்தமிழர்களின் சமூக நிலையை__________விளக்குகிறது.

   அ) மணிமேகலை ஆ) தொல்காப்பியம் இ) பத்துப்பாட்டு ஈ) எட்டுத் தொகை

### ஆ. பொருத்துக .

| | | |
|---|---|---|
| 1. | பட்டினம் | நாடகம் |
| 2. | பாணர் | சமவெளி |
| 3. | கூத்து | கடற்கரைப் பகுதி |
| 4. | விரலியர் | காட்டுப் பகுதி |
| 5. | முல்லை | மலைப் பகுதி |
| | | நடனமாடுபவர் |
| | | இசைவாணர் |

**இ. தலைப்புகளின் கீழ் கேட்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளி.**

1. சங்க இலக்கியம்

   அ) இரட்டைக் காப்பியங்களின் பெயர்களைக் கூறு.

   ஆ) சங்க இலக்கியத்தில் எத்தனை பெருங்காப்பியங்கள் உள்ளன ?

   இ) எந்தத்தமிழ் இலக்கியத்தில் "போரும் காதலும்" விவரிக்கப்பட்டுள்ளது ?

   ஈ) பக்தி இலக்கியத்தை பற்றி ஓர் குறிப்பு வரைக.

2. சங்க காலச் சமுதாயம்

   அ) குறிஞ்சி நில மக்கள் யாவர் ?

   ஆ) கடற்கரைப்பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது ?

   இ) சங்கத்தமிழர்களின் சமூக நிலையை எந்த நூல் கூறுகிறது ?

   ஈ) ஐந்திணைகள் யாவை ?

**ஈ. சுருக்கமாக விடையளி.**

1. தமிழ் மொழியை பற்றி ஓர் குறிப்பு எழுதுக.
2. சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட புகழ்பெற்ற கோவில்களின் பெயர்கள் சிலவற்றை எழுதுக.
3. அரசுக்குக் கிடைத்த வருவாய்கள் யாவை ?
4. களப்பிரர்களைப் பற்றி ஓர் குறிப்பு எழுது.
5. சித்த மருத்துவம் என்றால் என்ன ?
6. சங்க கால இசையைப் பற்றி ஓர் குறிப்பு வரைக.

**உ. விரிவான விடையளி.**

1. சங்க கால நிர்வாக முறையை விவரி.
2. சோழர்களின் பண்பாட்டுப்பங்களிப்பை சுருக்கமாக எழுதுக.

**ஊ. செய்முறைப் பயிற்சி.**

1. தென்னிந்திய வரைபடத்தில் சேர,சோழ பாண்டிய, பல்லவர்களின் எல்லைகளை வரையவும்.
2. புகழ்பெற்ற தென்னிந்தியக் கோவில்களின் நிழற்படங்களைச் சேகரிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு

1. பல்லவர்கள் மற்றும் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்ட புகழ்வாய்ந்த கோயில்களின் படங்களைச் சேகரித்து, அவர்களின் கட்டடக்கலை குறித்து குறிப்பு எழுதுக.

2. இந்தியப் பண்பாட்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்குத் தமிழகத்தின் பங்களிப்பை பட்டியலிடுக.

   அ. மொழி மற்றும் இலக்கியம்

   ஆ. சமுதாயம்

   இ. மதம்

   ஈ. கலை

   உ. கட்டடக்கலை

   ஊ. அறிவியல்

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

# புவியியல்

## 1. தமிழ்நாடு – வாணிபம்

வர்த்தகம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் அடிப்படைக்காரணியாகும். ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதி இறக்குமதியாகும் பல்வகைப் பொருட்கள் அந்த நாட்டின் பொருளாதார அமைப்பை எடுத்துக்காட்டும் கண்ணாடி போன்றதாகும். வர்த்தகம் என்பது உபரி பொருட்களை உள்நாட்டினுள் இருவேறு பகுதிகளுக்கு இடையே பரிமாறிக்கொள்வதாகும். சுருக்கமாகச் சொன்னால், உபரிப் பொருட்களை வாங்குவதும் விற்பதுமேயாகும். அது உள்ளூர்ப் பகுதியிலும், தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் மேற்கொள்ளப்படுவதாகும். பழைய கால வர்த்தக முறையான பண்டமாற்று முறையில் பொருட்களை கொடுத்து அதற்கு மாற்றாக வேறு ஒரு பொருளை வாங்கும் முறை வழக்கத்திலிருந்தது. பின்பு வாங்குதலுக்கும், விற்பதற்கும் பணம் என்ற மாற்றுவழி செயல்முறைக்கு வந்தது.



### ஏற்றுமதி

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யும் பொருளை மற்றொரு நாட்டிற்கு வெளிநாட்டுப் பணத்திற்கு விற்பதையே நாம் ஏற்றுமதி என்கிறோம். வெளிநாட்டு வர்த்தகப் பரிமாற்றத்தை அதிகரிக்கும் ஒரு நாடு அந்நிய செலாவணி கையிருப்பை அதிகமாகக் கொண்டிருக்கும்.

### முக்கிய ஏற்றுமதி பொருட்கள்

துணிவகைகள் ஆயத்த ஆடைகள்

மருந்துகள், மருத்துவப் பொருட்கள்

இரசாயனப் பொருட்கள்,

தோல், தோல் பொருட்கள்,

இயந்திரப் பொருட்கள், ஸ்டீல் வகைகள்

தாதுக்கள், கனிமங்கள்,

மென் பொருள் மற்றும் மின்னணுப் பொருட்கள்.









### இறக்குமதி

இறக்குமதி என்பது பலவகைப் பொருட்களையும், சேவைகளையும் வெளிநாடுகளிலிருந்து வாங்குவதாகும். அநேகமாக உலகத்தின் ஒவ்வொரு நாடும் ஏற்றுமதி மூலம் இறக்குமதியை ஈடுசெய்கிறது.

### முக்கிய இறக்குமதி பொருட்கள்

1. எரிபொருள்கள், தாதுக்கள் மற்றும் கச்சா எண்ணெய்.
2. மின்சார இயந்திரக் கருவிகள் மற்றும் உதிரிப் பாகங்கள்.
3. இரும்பு, எஃகு மற்றும் அதன் பொருள்கள்.
4. இயற்க்கை மற்றும் செயற்கை முத்துகள்.
5. தாவர இரசாயனப் பொருள்கள்
6. பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள்
7. தாவரக் கொழுப்பு மற்றும் எண்ணெய் பொருள்கள்

வர்த்தகம் என்பது பொருட்களின் பரிமாற்றம் என்பது மட்டும் அல்லாமல் சேவைப் பரிமாற்றமும் அடங்கியதாகும். வர்த்தகம் என்பது இரண்டு வகைப்படும். 1)உள்நாட்டு வர்த்தகம் 2)வெளிநாட்டு வர்த்தகம்

## உள்நாட்டு வர்த்தகம்

ஒரு நாட்டின் உள்பகுதிகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் உபரிப் பொருட்களின் பரிமாற்றம் உள்நாட்டு வணிகம் எனப்படுகிறது. சாலை வழிகளும் இரயில் பாதைகளும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தவகை வணிகத்தில் தேசியசெலாவணி உபயோகிக்கப்படுகிறது.

## வெளிநாட்டு வர்த்தகம்

ஒரு நாட்டின் புவி எல்லையைக் கடந்து அயல்நாடுகளுடன் நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் எனப்படும். இதனை இருதரப்பு வணிகம் என்றும் கூறுவர். பலவகை வணிகம் என்பது இரண்டு நாடுகளுக்கு மேற்பட்டு பல நாடுகளுடன் நடக்கிறது. பன்னாட்டுச் செலாவணிகள் உபயோகப்படுத்தப்பட்டு வர்த்தகம் நடைபெறுகிறது. துறைமுகங்களே இதில் முக்கிய அங்கம் வகிக்கிறது.



சில அயல்நாட்டு நாணயங்கள்

## தமிழ்நாட்டின் வர்த்தகம்

தமிழ்நாட்டில் சாலை வழிகளும், இருப்புப் பாதைகளும் நன்கு வளர்ச்சியடைந்திருப்பதால், மாவட்டங்களுக்கிடையே உள்நாட்டு வணிகம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

மாநிலத்தில் பொருட்களை விற்பனை செய்வதற்காகப் பல்வேறு வியாபாரச் சங்கங்களும் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் மாவட்டம்தோறும் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வியாபாரச் சங்கமும் பயனாளிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். பொருட்களின் விற்பனையைக் கையாளுவதற்கும், நியாயமான விலையை நிர்ணயம் செய்வதற்கும் அமைக்கப்பட்ட சுமார் 21 வியாபாரச் சங்கங்கள் தமிழகம் எங்கும் இயங்கி வருகின்றன. இவை தவிர்த்து 303 விவசாயப் பொருட்களுக்கான விற்பனை மையங்கள், பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இவ்விற்பனை மையங்கள் மூன்று வகைகளாக, முதன்மை, இரண்டாம் நிலை முறைபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் மற்றும் முறைப்படுத்தப்படாத விற்பனைக் கூடங்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. (அக்மார்க் நெட் 2010 புள்ளி விவரம்)

மாநிலத்தின் மாவட்டங்களுள் ஈரோடு மாவட்டம் அதிகப்படியான 34 முறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களைத் கொண்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாகக் கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், 21 முறைப்படுத்தப்பட்ட விற்பனை மையங்களைக் கொண்டுள்ளது.

விவசாயப் பொருட்களின் நேரடி கொள்முதல் மற்றும் விற்பனைக்காகாவும், இடைத் தரகர்கள் இன்றி உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் பயனடையும் வகையில் 1999ஆம் ஆண்டு முதன் முதலில் மதுரையில் உழவர் சந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நடப்பு ஆண்டு நிலவரப்படி மாநிலமெங்கும் சுமார் 103 உழவர் சந்தைகள் இயங்கி

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

வருகின்றன. இவை நாள் ஒன்றுக்கு சராசரியாக ₹.191.77 இலட்சம் மதிப்பிலான 1609 மில்லியன் டன் காய்கனி வகைகளை விற்பனை செய்கின்றது. இத்திட்டம் நாளொன்றுக்கு சுமார் 7526 விவசாய உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை 2,71,685 நுகர்வோருக்கு உழவர் சந்தைகள் மூலம் விநியோகம் செய்கிறது. (2008–2009 புள்ளி விவரம்)

பொருட்களை விற்பனை செய்வதற்கு வியாபாரக் குழுமங்களும், விற்பனைக் கூடங்களும், கிடங்குகளை அமைத்துள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் சங்கம் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு பட்டு நூல் கச்சா பட்டை பெற்று, கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் மற்ற நெசவாளர் சங்கங்களுக்கும் விநியோகம் செய்கிறது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு அரசின் தொழில் மற்றும் வணிகத்துறையின் ஓர் அங்கமாகச் செயல்பட்டு, கிராமத் தொழில் முனைவோருக்கும், கைவினைஞர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தேவையான




டைடல் பார்க் – சென்னை

விற்பனை வசதிகளைச் செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் மாநிலத்தொழில் வளர்ச்சிக் கழகமான (SIPCOT) சிப்காட், தொழில் வளர்ச்சிக்கும், விற்பனை ஊக்குவிக்கும் வகையில், தொழில் மையங்கள் மற்றும் பூங்காக்களை அமைத்துள்ளது.

தமிழ் நாட்டின் ஏற்றுமதி, நம் நாட்டின் மொத்த ஏற்றுமதியைவிட அதிக அளவில் வேகமாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. தமிழ் நாட்டில் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், மென்பொருள் உற்பத்தியின் மூலம் வியக்கத்தக்க வகையில் ஏற்றுமதியின் மதிப்பு அளவை அண்மைக் காலங்களில் அதிகப்படுத்தியிருக்கின்றன.

தமிழ்நாடு மென்பொருள் ஏற்றுமதி – 2005 – 2009 (மதிப்பு ரூபாயில்)



**மென்பொருள் ஏற்றுமதி மதிப்பு**

| வருடம் | ஏற்றுமதி (ரூ.கோடியில்) |
|---|---|
| 2007–08 | 28,426 |
| 2008–09 | 36,680 |

**வெளிநாட்டு வர்த்தகம் (ரூ. கோடியில்)**

**ஏற்றுமதி**

| | |
|---|---|
| கடல்வழி | 60,260 |
| ஆகாயவழி | 30,495 |

**இறக்குமதி**

| | |
|---|---|
| கடல்வழி | 1,28,540 |
| ஆகாயவழி | 30,495 |

### வர்த்தகத்தின் முக்கியத்துவம்

வர்த்தகம் என்பது வளர்ச்சியை இயக்கும் இயந்திரம் ஆகும்.

1. அந்நிய செலாவணி இருப்பை அதிகரிக்க உதவுகிறது.
2. எல்லாவகையான பொருட்களையும் எங்கும் கிடைக்க வகை செய்கிறது.
3. இரண்டு நாடுகளுக்கு இடையே தொழில்நுட்ப பரிமாற்றத்தை அதிகரிக்கிறது
4. தொழிலாளர் நல முன்னேற்றத்திற்கு உதவுகிறது
5. நாட்டின் மொத்த உற்பத்தியை அதிகப்படுத்துகிறது எனலாம்.

## பயிற்சி

**அ. சரியான விடையை தேர்ந்தெடு.**

1. பண்டைக்கால வர்த்தகம் என்பது__________.

   அ) மின் வர்த்தகம் ஆ) பண்ட மாற்று முறை

   இ) மரபுவழி முறை ஈ) பணப்புழக்கமுறை

2. __________ பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கிறது.

   அ) ஏற்றுமதி ஆ) இறக்குமதி இ) வாணிபம் ஈ) போக்குவரத்து

3. தமிழ்நாட்டில் சிறப்பான உள்நாட்டு வாணிபப் பரிமாற்றம்__________ இடையே ஏற்படுகிறது.

   அ) மாநிலம் ஆ) மாவட்டம் இ) நாடுகள் ஈ) நகரங்கள்

4. __________மாவட்டம் வெடி பொருள்களை ஏற்றுமதி செய்கிறது.

   அ) வேலூர் ஆ) விழுப்புரம் இ) விருதுநகர் ஈ) சிவகாசி

**ஆ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | ஏற்றுமதி | காஞ்சிபுரம் |
| 2. | இறக்குமதி | தூத்துக்குடி |
| 3. | டைடல் பார்க் | வியாபாரச் சங்கம் |
| 4. | டான்சில்க் | மதுரை |
| 5. | முதல் உழவர் சந்தை | சென்னை |
| | | இயந்திரப் பொருட்கள் |
| | | மென்பொருட்கள் |

**இ. சுருக்கமான விடையளி.**

1. வர்த்தகம் என்றால் என்ன ?
2. தமிழ் நாட்டின் இறக்குமதிப் பொருட்கள் சிலவற்றைக் குறிப்பிடு.
3. இறக்குமதி, ஏற்றுமதியை வேற்றுமைப்படுத்து.
4. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் என்பது என்ன ?

**ஈ. விரிவான விடையளி.**

1. வர்த்தகம் ஏன் வியாபாரத்தின் இயக்க இயந்திரம் எனக் கூறப்படுகிறது ?
2. உழவர் சந்தையைப் பற்றி எழுதுக.

## உருவாக்க மதிப்பீடு

1. பல்வேறு நாடுகளின் செலவாணி முறையை அறிந்து அதற்குச் சமமான இந்திய ரூபாய் மதிப்பைக் கண்டுபிடி.
2. அருகில் உள்ள பல்பொருள் அங்காடிக்குச் சென்று அங்கு விற்கும் பொருள்கள் எங்கிருந்து வரவழைக்கப்பட்டன என்பதையும் அதன் விலையையும் அறிக. அவற்றில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பட்டியலிடுக.
3. பண்டமாற்று முறை தோல்வியடையக் காரணங்கள் யாவை?

# 2. தமிழ் நாடு – மக்கள் தொகை

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, அந்நாட்டில் வாழும் மக்களே மிகப்பெரிய வளமாகும். ஒரு பகுதியில் வாழும் மொத்த மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை எனப்படுகிறது. மக்கள் தொகை குறித்த பாடங்களைப் படிப்பதை மக்கட் புவியியல் என்கிறோம். இதை ஆங்கிலத்தில் "டெமோகிராபி" (demography) என்கின்றனர். இயற்கையில் கிடைக்கும் வளங்களை உபயோகமுள்ள பொருட்களாக மாற்றும் வல்லமையால் மனிதன் வளங்களுக்குள் மிகச் சிறந்த வளமாகக் கருதப்படுகிறான். மனித ஆற்றல், அறிவு, மற்றும் சக்தி இவை அனைத்தும் தனி மனிதனை மட்டுமல்லாது, அவன் சார்ந்த சமூகம் மற்றும் வாழும் நாட்டினையும் உயர்த்துகிறது. ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிப் பாதை, அந்த நாட்டில் வாழும் மக்களின் தனித்த கல்வி நிலை, ஆரோக்கியம் மற்றும் உழைப்புத் திறன் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இதன் காரணமாகவே ஒவ்வொரு நாடும் தங்களது மக்களின் தரம் மற்றும் எண்ணிக்கையை நிலை நிறுத்துவதை தன்னுடைய முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## தமிழ் நாட்டில் மக்கள் தொகை

2011ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டில் மொத்த மக்களின் எண்ணிக்கை 7,21, 38,958 ஆகும். இதில் 3,61,58,871 ஆண்களும், 3,59,80,087 பெண்களும் உள்ளனர். தேசிய அளவில் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இது 5.96 விழுக்காடு ஆகும்.

அரசு நிறுவனமான மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவனம் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைப் பற்றிய முழு விவரங்களையும் சேகரித்து, பட்டியலிட்டு, மக்கள் தொகை தொடர்பான புள்ளி விவரத்தை வெளியிடுகிறது.

**மக்கள் தொகையியல் சார்ந்த முக்கியக் கோட்பாடுகள்**

ஆயிரம் மக்களின் எண்ணிக்கையில் உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையே கச்சா பிறப்பு விகிதமாகும்

ஆயிரம் மக்களின் எண்ணிக்கையில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கையே கச்சா இறப்பு விகிதமாகும்.

ஓர் ஆண்டில் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் ஒரு வயதிற்குள் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கையே குழந்தை இறப்பு விகிதமாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்நாள் காலத்தைக் கணக்கில் கொண்டு ஒரு நபர் சராசரியாக வாழும் காலத்தைக் கணக்கிடுவது வாழ்நாள் மதிப்பீடு ஆகும்.

மக்கள்தொகையில் ஓர் ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் எண்ணிக்கையே பாலின விகிதமாகும்.


மக்கள் தொகையின் கருத்தரிப்பு விகிதம் அல்லது மொத்த காலம் கருத்தரிப்பு விகிதம் (TPFR) என்பது தனது வாழ்நாளில் அதிகமாக ஒரு பெண்ணுக்கு பிறக்கப்போகும் குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை ஆகின்றன.

தமிழ் நாட்டின் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் முறையே 15.9 மற்றும் 7.6 ஆகும். குழந்தைகள் இறப்பு விகிதம் 37 ஆக உள்ளது.

## மக்கள் தொகை வளர்ச்சி

கொடுக்கப்பட்டுள்ள படத்தின் மூலம், தமிழ் நாட்டின் மக்கள் தொகை கடந்த அறுபது ஆண்டுகளில் (1951 – 2011) இரு மடங்காக உயர்ந்துள்ளது என்பதை அறியலாம். பிறப்பு விகிதத்திலிருந்து இறப்பு விகிதத்தைக் கழித்து, கணக்கிடுவதன் மூலம் இயற்கையான வளர்ச்சி விகிதத்தை அறிய முடியும். இதனை விழுக்காட்டில் கணக்கிட்டால் ஆண்டு வளர்ச்சி விகிதம்

ஆகும். தமிழ்நாட்டின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 1.1% ஆகும். இது தேசிய வளர்ச்சி விகிதத்திற்கும் குறைந்த அளவேயாகும்.




ஒரு நாட்டின் பிறப்பு விகிதம் தொடர்ந்து பெருகி வருவதால் அந்நாட்டில் பிறக்கும் அத்தனை குழந்தைகளுக்கும் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை அளிக்க வேண்டியுள்ளது. மக்கள் தொகை உயர உயர, சூழ்நிலை கேடுகளும் மிகுதியாகின்றன. ஏனைய மாநிலங்களை விடத் தமிழ் நாடு வளர்ச்சி விகிதத்தை மிகுதியாகக் குறைத்துக் கொண்டுள்ளது.

## மக்கள் தொகைப் பரவல்

தமிழ் நாட்டில் மொத்த மக்கள் தொகையில் அதிக அளவான 6.4 விழுக்காட்டை சென்னை மாவட்டம் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து கோயம்பத்தூர், வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்கள் அதிக எண்ணிக்கையிலான மக்களை கொண்டுள்ளன. மிகக் குறைந்த மக்கள் தொகையை உடைய மாவட்டம் பெரம்பலூர் (0.078%) மாவட்டமாகும்.

## மக்கள் தொகைப் பரவலை கட்டுப்படுத்தும் காரணிகள்

வாழ்வதற்கேற்ற காலநிலையை சமவெளி பகுதிகள் கொண்டுள்ளதால், அங்கு மக்கள் தொகைப் பரவல் அதிகம் காணப்படுகிறது.


மிதமான தட்ப வெப்ப நிலையையும், பொருளாதாரச் செயல்பாட்டுக்கு ஏதுவான சூழ்நிலையையும் கடலோரச் சமவெளிப் பகுதிகள் கொண்டுள்ளதால் அப்பகுதி அதிக மக்கள் தொகையை ஊக்குவிக்கிறது.

பெரிய நகரங்களும், மாநகரங்களும் கற்றோர், கல்லாதோர் ஆகிய இரு

தமிழ்நாடு மாவட்டவாரியாக மக்கள் அடர்த்தி பரவல் – 2011

| எண்ணிக்கை / ஒரு சதுர கி.மீ | மக்கள் அடர்த்தி தன்மை | மாவட்டங்கள் |
|---|---|---|
| 400க்கும் குறைவாக | குறைந்த மக்கள் அடர்த்தி | நீலகிரி (288), இராமநாதபுரம் (320), பெரம்பலூர் (323), சிவகங்கை (324), தருமபுரி (332), புதுக்கோட்டை (348), திண்டுக்கல் (357), கிருஷ்ணகிரி (370), கரூர் (371), தூத்துக்குடி (378), அரியலூர் (317), ஈரோடு (397), திருவண்ணாமலை (399) |
| 400 முதல் 800 வரை | மிதமான மக்கள் அடர்த்தி | தேனீ (433), விருதுநகர் (454), திருநெல்வேலி (458), திருப்பூர் (476), விழுப்புரம் (482), நாமக்கல் (506), திருவாரூர் (533), திருச்சிராப்பள்ளி (602), வேலூர் (646), சேலம் (663), நாகப்பட்டினம் (668), தஞ்சாவூர் (691), கடலூர் (702), கோயம்புத்தூர் (748) |
| 800க்கு மேல் | அதிக மக்கள் அடர்த்தி | மதுரை (823), காஞ்சிபுரம் (927), திருவள்ளூர் (1049), கன்னியாகுமரி (1106), சென்னை (26903) |

# தமிழ்நாடு
## மக்கள் அடர்த்தி



பிரிவினருக்கும் ஏற்ற வேலைவாய்ப்பினை அளித்து மக்களை கவர்ந்து இழுக்கின்றன.

வறண்ட பகுதிகள் பொதுவாகக் குறைந்த மக்கள் தொகையையே கொண்டுள்ளன.

செங்குத்தான சரிவையும், அடர்ந்த காடுகளையும் கொண்ட மலைப்பிரதேசம் மிகக் குறைந்த மக்கள் தொகையையே கொண்டுள்ளன.

## மக்களடர்த்தி

பல்வேறு பகுதிகளுக்கிடையே காணப்படும் மக்கள் தொகை வேறுபாட்டை பொதுவாக மக்களடர்த்தியின் மூலம் அறியலாம். ஒரு பகுதியின் மக்கள் தொகையை அதன் பரப்பளவால் (சதுர கி.மீ.) வகுத்தால் கிடைக்கும் எண்ணிக்கையையே மக்களடர்த்தி என்கிறோம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அதனை ஒரு சதுர கிலோ மீட்டருக்கு எவ்வளவு என்பதை அறிவதே மக்களடர்த்தியாகும். கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை மாவட்டங்களின் மக்களடர்த்தியை விளக்குகிறது.

**செயல்பாடு**

1) கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தின் உதவியுடன் உன் பகுதியின் மக்களடர்த்தியை கண்டுபிடி.

2) மாவட்டங்களுக்குள் உள்ள வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்க.

கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து, ஐந்து மாவட்டங்கள் அதிக மக்கள் அடர்த்தியையும், பதினான்கு மாவட்டங்கள் மிதமக்கள் அடர்த்தியையும், பதிமூன்று மாவட்டங்கள் குறைந்த மக்கள் அடர்த்தியையும் கொண்டுள்ளதை அறியலாம். மாநிலத்தின் தலைநகரமான சென்னை மாநகரம், நிர்வாகம், கல்வி, தொழில்வளம், வணிகம், வர்த்தகம், பொழுதுபோக்கு ஆகிய அம்சங்களைக் கொண்டிருப்பதால் மிக அதிக மக்கள் அடர்த்தியைப் பெற்றுள்ளது. சிவகங்கை மாவட்டம் மிகக் குறைந்த மக்களடர்த்தி கொண்டுள்ளது.

## தமிழ் நாட்டின் மக்கள் தொகை கட்டமைப்பு

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 37 விழுக்காடு மக்கள் 20 வயதுக்கு குறைவாகவும், 54 விழுக்காடு மக்கள் 20 முதல் 60 வரையிலும், 9 விழுக்காடு மக்கள் 60 வயதுக்கு மேற்பட்டும் உள்ளனர்.

தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 20 விழுக்காடு தாழ்த்தப்பட்டோரும், 1.1 விழுக்காடு பழங்குடியின மக்களும் வாழ்கின்றனர்.

சுமார் 88 விழுக்காடு மக்கள் இந்து மதத்தையும், 5.5 விழுக்காடு மக்கள் முஸ்லீம் மதத்தையும், 6 விழுக்காடு மக்கள் கிறித்துவ மதத்தையும் சார்ந்துள்ளனர். ஏனையோர் புத்த மதத்தினர் மற்றும் சமண மதத்தினர்கள் ஆவார்கள்.

தமிழ் நாட்டில் பாலின விகிதம், ஆயிரம் ஆண்களுக்கு 996 பெண்களாக உள்ளது. நீலகிரி மாவட்டம் அதிக பாலின விகிதத்தையும் (1042) தர்மபுரி மாவட்டம் (946) மிகக் குறைந்த பாலின விகிதத்தையும் கொண்டுள்ளது. சுமார் 15 மாவட்டங்களில் ஆண்களைவிட பெண்கள் அதிகமாக உள்ளனர்.


தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 51.55 விழுக்காடு ஊரகப் பகுதியிலும் 48.45 விழுக்காடு நகரத்திலும் வசிக்கின்றனர்.

## கல்வியறிவு

1951 முதல் 2011 வரையிலான காலக்கட்டத்தில், தமிழ் நாட்டு மக்களின் கல்வியறிவு விழுக்காடு மும்மடங்காகப் பெருகியுள்ளது. தமிழ் நாட்டில் 80.09 விழுக்காடு மக்கள் கல்வியறிவு பெற்றவராகத் திகழ்கின்றனர். மாவட்டங்களுக்குள், தர்மபுரி மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவு கற்றோர் 68.05 % உள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் அதிகபட்சமான 91.75 விழுக்காடு கற்றோர் உள்ளனர்.

சென்னையிலும், தூத்துக்குடியிலும் 80 விழுக்காட்டுக்கு மேற்பட்டோர் கல்வியறிவுடையவர்கள். தாழ்த்தப்பட்டோரில் 55 விழுக்காட்டினரும், பழங்குடி இனத்தவரில் 35 விழுக்காட்டினரும் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு – கல்வியறிவு விகிதம்




பள்ளிக் கல்வியைவிட்டு நீங்கியோரின் எண்ணிக்கை மாநிலத்தில் வெகுவாகக் குறைந்துள்ளது. எல்லோருக்கும் கல்வி என்பது மாநில அரசின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. ஆண்களில் ஆயிரத்தில் 726 நபர்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். ஆனால் பெண்களுள் 571 நபர்களே கல்வி அறிவு பெற்றவர்களாக உள்ளனர். ஆனால் மாவட்டங்களுக்குள், கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான ஆண்களும், பெண்களும் அதாவது முறையே 803, 758 நபர்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்.

## தொழில்


2011 மக்கள் தொகை கணக்கீட்டின்படி தமிழ்நாட்டில் 44.6 விழுக்காடு மக்கள் வேலைப் பார்க்கின்றனர். அவர்களுள் 55.3 விழுக்காடு மக்கள் முதன்மைத் தொழிலும், 27.7 விழுக்காடு மக்கள் இரண்டாம் நிலைத் தொழிலும், 30.8 விழுக்காடு மக்கள் மூன்றாம் நிலை தொழிலையும் புரிகின்றனர்.

தொழிலாளர்களின் வகைகள்:

| தொழில் | 1961 (%) | 1991 (%) | 2001 (%) |
|---|---|---|---|
| பயிர் செய்பவர்கள் | 42.0 | 25.0 | 18.4 |
| விவசாயக் கூலிகள் | 18.4 | 36.0 | 31.1 |
| வீட்டு வேலை, தொழில் புரிவோர்கள், உற்பத்தியாளர் | 13.4 | 03.6 | 05.3 |
| பிறபணி செய்வோர் | 26.2 | 35.0 | 45.2 |

ஆதாரம்: தமிழ் நாடு அரசின் மேம்பாடு அறிக்கை

தமிழ்நாடு தொழிலாளர்கள் மற்றும் வேலை இல்லாதோர்



மேற்கண்ட அட்டவணையிலிருந்து, விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்புரிவோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வரும் போக்கை காணலாம். அதே போல், கட்டுமானப்பணியிலும், மூன்றாம் நிலை தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமானதையும் அறியலாம். இது நகரமயமாதலின் போக்கினை எடுத்துக்காட்டுகிறது. 2000ஆம் ஆண்டில் வேலையற்றோரின் எண்ணிக்கை 2.4 விழுக்காடு ஆகும்.

### மகளிர் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் அவர்களின் பங்கும்

ஓர் சமூகம் அல்லது நாடு மேம்பட வேண்டும் என்றால் பெண்களின் ஆற்றலை உணர்ந்து, அதற்காக அங்கீகாரத்தை அளிக்க வேண்டும். தேசிய அளவில் பெண்களுக்குச் சட்டபூர்வமாக அதிகாரத்தை அளித்த முதல் மாநிலம் தமிழகமே ஆகும்.

பெண்களுக்கான சட்டபூர்வ அதிகாரம் என்பது,

- சுயமதிப்பைப் பெண்கள் உணரச் செய்தல்
- வாய்ப்புகளை தேர்ந்தெடுக்கவும், தீர்மானிக்கவும் உரிமை அளித்தல்
- வளங்களையும், அவற்றை அணுகும் வாய்ப்புகளைப் பெறும் உரிமை மற்றும்
- வீட்டிலும் வெளி வாழ்விலும் தங்களது நிலையைத் தீர்மானித்தல்.

### தமிழக அரசின் மகளிருக்கான அதிகார மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழக அரசு மகளிரின் மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. அறிவியல் நகரம் பெண்களுக்கான தொழில் முனைவு முன்னேற்றத்துக்கான திட்டத்தை (EDP - Entrepreneurship Development Programme) செயல்படுத்திவருகிறது. மேலும் தொழில் முனைவு விழிப்புணர்வு முகாம்கள் (EAP - Entrepreneurship Awareness Programme) நடத்துவதன் மூலம் பெண்களின் தனித்திறமைகளை வெளிக் கொணர்ந்து அவர்களது ஆற்றலை நிரூபணம் செய்ய உதவி செய்கின்றது.

மகளிர் சுய உதவிக்குழுத் திட்டம் வறுமை ஒழிப்பதற்காகத் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. குழு உறுப்பினர்கள் மாதந்தோறும் சிறு சேமிப்பு செய்து, பொதுப் பணமாக உருவாக்கி, தேவைப்படும்போது தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றனர். தமிழ்நாட்டில் 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில்தான் முதன் முதலில் இக்குழு செயல்படத் தொடங்கியது. இப்போது தமிழ்நாட்டில் 1.4 இலட்சம் குழுக்கள், 23.83 இலட்சம் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுவின் மூலம் பொருளாதார மேம்பாட்டினைக் கண்ட முதல் மாநிலமாக தமிழ் நாடு திகழ்கிறது.

**உனக்குத் தெரியுமா ?**

ஐக்கிய நாட்டுச் சபையின் முன்னாள் செயலாளர் கோஃபி அனான் கூறியதாவது: பாலினச் சமத்துவம் என்பதே ஓர் இலக்கு. வறுமை ஒழிப்பிற்கும், நீடித்த வளர்ச்சி கொண்டு வருவதற்கும், திறமையான ஆளுமைத்தன்மை அடைவதற்கும் முன்நிறைவாகப் பாலினச் சமத்துவம் அமைகிறது.




உலகளாவிய பெண்களுக்கான அதிகார அமைப்பு

சமூக அறிவியல்




**மனிதவள மேலாண்மை**

மனிதவளம் என்பது பூமியின் வளங்களுக்குள் அதிக மதிப்புடைய வளமாகும். எனவே மக்கள் பூமியில் அமைதியுடன் வாழ இவ்வளத்தை பேணிக் காக்க வேண்டும். மனிதவள மேலாண்மை, ஒவ்வொரு மனிதனுடைய தனித்தன்மையை மேம்படுத்தி அதனை நாட்டிற்கும், உலக சமாதானத்திற்கும் ஏற்ற வகையில் தன் பங்கை ஆற்ற வழிவகுக்கிறது என்றால் மிகையாகாது.

**செயல்பாடு**

தானும் வாழ்ந்து, பிறரையும் வாழச் செய்ய தனி மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகளைப் பட்டியலிடு.

1)
2)
3)
4)
5)

## பயிற்சி

**அ. சரியான விடையை தேர்ந்தெடு.**

1. தமிழ் நாட்டில்__________மாவட்டம் கல்வியறிவில் முதன்மை வகிக்கிறது.

அ) கரூர் ஆ) கன்னியாகுமரி இ) சென்னை ஈ) பெரம்பலூர்

2. மாவட்டங்களுக்குள் மிகக் குறைந்த மக்கள் அடர்த்தி உடையது__________ஆகும்.

அ) சிவகங்கை ஆ) நீலகிரி இ) கன்னியாகுமரி ஈ) திருவள்ளூர்

3. தமிழ் நாட்டின் மக்கள் தொகை 1951 முதல் 2011 முடிய 60 ஆண்டுகளில்__________ நிலையை அடைந்துள்ளது.

அ) உயர்ந்த ஆ) இரட்டிப்பு
இ) குறைந்த ஈ) மாற்றமில்லாத

4. செங்குத்தான சரிவும் அடர்ந்த காடுகளும் கொண்ட மலைப்பிரதேசம் மிக__________ மக்கள் தொகையை கொண்டுள்ளது.

அ) நடுத்தரம் ஆ) அதிகம் இ) குறைந்த ஈ) மிகக் குறைந்த

athiyamanteam.com | TNPSC Exam - Video Class+ Test Batch-| 8681859181

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டு வளர்ச்சி விகிதம் | 51.55% |
| 2. | ஊரக மக்கட் தொகை | 48.45% |
| 3. | தமிழ் நாட்டின் கல்வியறிவு விழுக்காடு | 1.1% |
| 4. | இந்துக்கள் | 80.09% |
| 5. | நகர மக்கட் தொகை | 88% |
| | | 10% |
| | | 25% |

### இ. குறுகிய விடையளி.

1. மக்கள் தொகைப்பரவலைக் கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை ?
2. மகளிர் சுய உதவிக்குழு குறித்து எழுதுக ?
3. மக்கள் தொகையை வளமாகக் கருதுவதற்கான காரணங்கள் யாவை ?
4. பிறப்பு விகிதத்தை இறப்பு விகிதத்திலிருந்து வேறுபடுத்தி காட்டுக.
5. மனித மேலாண்மையின் முக்கிய குறிக்கோள் என்ன ?

### ஈ. விரிவான விடையளி.

1. தமிழ் நாட்டில் மக்கள் தொகைப் பரவல் பற்றி எழுதுக.
2. மகளிர் அதிகார மேம்பாட்டிற்காகத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை எழுதுக.

### உ. கொடுக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டின் வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைத் தகுந்த குறியீடு கொடுத்து குறிக்கவும்.

1. மக்கள் அடர்த்தி மிகக் குறைவாக உள்ள மாவட்டம்.
2. மக்கள் அடர்த்தி அதிகம் உள்ள மாவட்டம்.

## உருவாக்க மதிப்பீடு

1. சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகரகங்கள் அதிக மக்கள் அடர்த்தி கொண்டிருக்கக் காரண ங்கள் யாவை?
2. ஒரிடத்தின் மனித வளத்தை மேம்படுத்துவத்தின் காரணங்களைப் பட்டியலிடுக.